

# ரமலான் கடைகளை விற்றால்

# வியாபார உரிமம் பறிமுதல்

## - பிரதமர் எச்சரிக்கை



**புத்ராஜெயா, பிப். 11-** ரமலான் காலத்தில் வியாபாரம் செய்ய வணிகர்களுக்கு வழங்கப்படும் கடைகளை மூன்றாம் தரப்பினருக்கு விற்றால், வியாபார உரிமத்தை அரசாங்கம் உடனடியாக பறிமுதல் செய்யும் என பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரமலான் பாசார் விவகாரத்தில் இடைத்தரகர்களாக செயல்படுபவர்கள், வியாபார தளத்தை வாடைக்கு விட்டு அதிக லாபத்தை சம்பாதித்து வருகின்றனர். இது இன்று நேற்று அல்ல பல ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது. இதனால், இவ்வாண்டு வியாபார உரிமத்தை வழங்கும் வழிமுறைகளில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) சில மாற்றங்களை கொண்டு வந்துள்ளது.

பெருநாள் காலத்தில் கூடுதல் வருமானத்தை பெற மக்கள் கடைகளை தற்காலிகமாக வியாபாரம் செய்கின்றனர். அதிலும் சிலர் அதிக லாபத்தை பார்க்க சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். வியாபார சங்கங்கள் பாதுகாப்பிற்கும் தூய்மை பணிக்கும் வணிகர்களிடம் அதிக பணத்தை வாங்குவது ஏற்று கொள்ள முடிகிறது. ஆனால், கடைகளை விற்பது கண்டிக்கத்தக்கதாகும். இது நீண்ட காலமாக நடந்து வருகிறது என்பதை அரசு ஊழியர்கள் அறிந்துள்ளனர்.

எனவே, யாருக்கு கடைகளுக்கான உரிமம் கிடைக்கிறதோ அவர்கள் தான் அதனை பயன்படுத்த வேண்டும். கடைகளை விற்பது கண்டறியப்பட்டால், உரிமம் பறிக்கப்படும் என பிரதமர் துறை பணியாளர்களுடனான சந்திப்பில் பேசிய டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நினைவூட்டினார்.